மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்,

**உங்கள் வாகனத்தின் காப்பீட்டு மதிப்பின் போதுமான அளவு**

எமது நிறுவனத்தில் உங்கள் காப்புறுதி ஒப்பந்ததை புதுப்பித்ததற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம், மேலும் கீழே உள்ளவற்றைப் பற்றி உங்களுக்கு ஆலோசனை வழங்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம்.

நீங்கள் அறிந்த வகையில் தற்போது சந்தையில் வாகன பெறுமதியானது கணிசமான அளவு அதிகரித்துள்ளது. எனவே, உங்கள் வாகனத்திற்கு துரதிர்ஷ்டவசமான இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால் சரியான அளவு இழப்பீடு கிடைப்பதை உறுதி செய்வதற்காக, தயவுசெய்து உங்கள் வாகன காப்பீட்டுத் தொகையை தற்போதைய சந்தைப்பெறுமதிக்கு ஏற்ப மதிப்பாய்வு செய்து திருத்திக்கொள்ளவும்.

இழப்பீடு கோரப்படும் சந்தர்ப்பத்தில் உங்களுடைய வாகனம் தற்போதைய சந்தை பெறுமதிக்கு ஏற்ப காப்புறுதி செய்யப்படாதவிடத்து குறைக்காப்பீட்டு நிபந்தனைக்கு உட்படும்.

குறைக்காப்பீட்டு சூத்திரம் கிழே தரப்பட்டுள்ளது

செலுத்தக்கூடிய நட்டஈட்டு தொகை = காப்புறுதிப்பெறுமதி / சந்தைப்பெறுமதி X நட்டஈட்டு தொகை

உ+ம் : காப்புறுதிப்பெறுமதி – ரூ. 1,000,000.00
சந்தைப்பெறுமதி – ரூ. 2,000,000.00
நட்டஈட்டு தொகை – ரூ. 50,000.00

செலுத்தக்கூடிய நட்டஈட்டு தொகை = 1,000,000.00 / 2,000,000.00 X 50,000.00

= 25,000.00

(கொள்கையின் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

மேலும், மொத்த இழப்பு ஏற்பட்டால், வாகனம் தற்போதைய சந்தை பெறுமதிக்கு ஏற்ப காப்புறுதி செய்யப்படாதவிடத்து அதே நிலையில் உள்ள புதிய வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு நீங்கள் பெறக்கூடிய அதிகபட்சதொகை காப்பீட்டுத்தொகையாகும்.

தயவுசெய்து உங்கள் விற்பனை பிரதிநிதியை அல்லது பின்வரும் தொலைபேசி **011-2206306** இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும், நாங்கள் உங்களுக்கு உதவ காத்திருக்கிறோம்.

எல்லா நேரங்களிலும் எங்கள் சிறந்த சேவையை வழங்குவதை உங்களுக்கு உறுதியளிக்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
மோட்டார் வாகன காப்புறுதி பிரிவு